உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# பேசுதல் 1



Compiled by
P. Isaac Chandran

சொற்களின் மிகுதியில் பாவமில்லாமறற்போகாது: தன் உதடுகளை அடக்குகிறவனோ புத்திமான்.
நீதிமொழிகள் 10:19

மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.
நீதிமொழிகள் 18:21

தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்: தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்.
நீதிமொழிகள் 13:3

ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்: நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்.
நீதிமொழிகள் 15:4

பேசாதிருந்தால் மூடனும் ஞானவான் என்று எண்ணப்படுவான்: தன் உதடுகளை மூடுகிறவன் புத்திமான் என்று எண்ணப்படுவான்.
நீதிமொழிகள் 17:28

ஊமையனுக்காகவும் திக்கற்றவர்களெல்லாருடைய நியாயத்திற்காகவும் உன் வாயைத்திற.

உன் வாயைத் திறந்து, நீதியாய் நியாயந்தீர்த்து, சிறுமையும் எளிமையுமானவனுக்கு நியாயஞ்செய்.
நீதிமொழிகள் 31:8,9

மனுஷனுக்குத் தன் வாய்மொழியினால் மகிழ்ச்சியுண்டாகும்: ஏற்றகாலத்தில் சொன்ன வார்த்தை எவ்வளவு நல்லது.
நீதிமொழிகள் 15:23

மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்.
நீதிமொழிகள் 15:1

புறங்கூறித் திரிகிறவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான்; ஆவியில் உண்மையுள்ளவனோ காரியத்தை அடக்குகிறான்.
நீதிமொழிகள் 11:13

ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள், மூடனுடைய உதடுகளோ அவனையே விழுங்கும்.
பிரசங்கி 10:12

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
மத்தேயு 12:36

அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.
மத்தேயு 6:7

நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான், பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான், இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.
லூக்கா 6:45

ஆதலால், நீங்கள் இருளிலே பேசினது எதுவோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும், நீங்கள் அறைகளில் காதிலே சொன்னது எதுவோ, அது வீடுகளின்மேல் கூறப்படும்.
லூக்கா 12:3

கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்த புறப்படவேண்டாம். பக்திவிருத்திக்குஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.
எபேசியர் 4:29

நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால் அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே அடக்கிக்கொள்ளக் கூடியவனுமாயிருக்கிறான்.
யாக்கோபு 3:2

துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகது.
யாக்கோபு 3:10

ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்கக்கடவர்கள்;
யாக்கோபு 1:19

என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்.
1 யோவான் 3:18

ஆம்! நம்முடைய சொற்களின் மிகுதியில் பாவமில்லாமற்போகாது: நம் உதடுகளை அடக்குவோமானால், நாம் புத்திமானாய் இருப்போம். ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்:
தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்: நஷ்டம் வந்தாலும், சொல்தவறாதவர்களாய் இருப்போம்.

மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தையையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுவோம்

******************